சிறப்பு சேவைகள் மற்றும் கட்டுரைகள்

# இந்திய தர நிர்ணய அமைவனத்தின் தர நியம அமைப்பு இன்று சென்னை அமிர்தா விஸ்வ வித்யாபீடத்தில் தொடங்கப்பட்டது.

प्रविष्टि तिथि: 09 JUL 2025 5:47PM by PIB Chennai






எதிர்காலத்திற்கான வலுவான ஆற்றல்மிக்க தேசத்தைக் கட்டமைப்பதற்கான அடித்தளத்தை உருவாக்குபவர்களாக இளைஞர்கள் திகழ்கின்றன. வளரும் பருவத்திலேயே நாட்டின் மாண்புகள் குறித்து அவர்களது மனங்களில் விதைக்கப்படுவதால் நாட்டின் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் திறன் கொண்ட சக்தியாக அவர்கள் உருவெடுக்கின்றனர். தரநிலைப்படுத்துதல் அடிப்படையிலான தர உணர்வு, விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய அங்கமாக உள்ளது. மேலும் மாணவர்கள் ஒரு பொருளுக்கான தரத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளும் வகையில் தரநிலைகள் மற்றும் தரநிலைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களிடையே கூடுதல் விழிப்புணர்வை மேம்படுத்த உதவிடும்.

இத்தகைய செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்திய தர நிர்ணய அமைவனம் இளம் திறமையாளர்களுக்கு தர நிர்ணயம் செய்வது போன்ற துறைகளில் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தரநிலை குறித்த அமைப்புகளை உருவாக்க வகை செய்கிறது. கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்கள் / வழிகாட்டிகள் அவர்களுக்கு கலங்கரை விளக்கமாகச் செயல்படுவார்கள், மாணவர்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்தவும், அறிவியல் மீதான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யவும் உதவிடும். தர நியம அமைப்புகள், மாணவர்களின் பள்ளிக் கல்வி அனுபவத்தை மேம்படுத்துவதுடன் அவர்களது தொழில்முறை சார்ந்த தனித்துவ வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் கல்வி நிறுவனங்கள் மூலமாக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில், **இந்திய தர நிர்ணய அமைவனம் சென்னையில் உள்ள** “**அமிர்தா விஸ்வ வித்யாபீட வளாகத்தில்**” **இல்** தரநியம அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. தரநிலை நியம அமைப்பின் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சி 2025 ஜூலை 9, 2025 காலை அமிர்தா விஸ்வ வித்யாபீடம் கல்லூரியின் அரங்கத்தில் கருத்தரங்கு நடைபெற்றது**.**






இந்தக் கருத்தரங்கில் அமிர்தா விஸ்வ வித்யாபீடம் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியரும் மாணவர் நலத்துறைத் தலைவருமான டாக்டர் ஆர். பிரசன்ன குமார் வரவேற்புரை ஆற்றினார், அமிர்தா விஸ்வ வித்யாபீடம் கல்லூரியின் இயந்திர பொறியியல் துறை பேராசிரியரும் முதல்வருமான டாக்டர் வி.ஜெயக் குமார் முதன்மை உரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் தொடக்க உரையாற்றிய இந்திய தர நிர்ணய அமைவனத்தின் சென்னை கிளை அலுவலகத்தின் வளப் பணியளார் திரு ஏ. பாஸ்கர் பிஜஎஸ் & தரநிலைகள் நியம அமைப்பின் செயல்பாடுகள், பிஜஎஸ் கேர் செயலி, இணையதளம் ஆகியவற்றின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். இதனையடுத்து மாணவர்களுக்கான தரநிலைகள் குறித்த எழுத்துப் போட்டி நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்

***

SV/KPG/KR

(रिलीज़ आईडी: 2143459) आगंतुक पटल : 6
इस विज्ञप्ति को इन भाषाओं में पढ़ें: English